# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்திய வானிலைத் துறை
# வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை
# கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
# (15.05.2024 முதல் 19.05.2024)

**அறிக்கை எண் 039/2024** **தேதி.14.05.2024**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 30°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 20°செ முதல் 25°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 13°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 10.05.24 முதல் 13.05.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 36°செ முதல் 38°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 23°C முதல் 26°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 87 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 37 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9-14 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (10.05.2024 முதல் 13.05.2024) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 19.05.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10/05 | 11/05 | 12/05 | 13/05 | தேதி | நாள்-1 15/05 | நாள்-2 16/05 | நாள்-3 17/05 | நாள்-4 18/05 | நாள்-5 19/05 |
| 17.1 | 1.9 | 14.1 | 9.7 | மழை (மி.மீ) | 29 | 4 | 32 | 30 | 34 |
| 38 | 36 | 36 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 32 | 30 | 30 | 29 |
| 24 | 26 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 22 | 20 | 20 | 20 |
| 7 | 6 | 6 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 7 | 7 |
| 87 | 70 | 78 | 78 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 80 | 80 | 80 |
| 52 | 37 | 57 | 84 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| 12 | 9 | 14 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 4 | 6 | 12 | 16 |
| 230 | 990 | 230 | 230 | காற்று வீசும் திசை | 90 | 110 | 250 | 250 | 250 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (15.05.2024 முதல் 19.05.2024)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த 5 நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 29°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 20°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

திசையிலிருந்து வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன்பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **15-05-2024** | 19.0 | 19.0 | 23.0 | 22.0 | 24.0 | 24.0 | 19.0 | 19.0 | 23.0 | 17.0 | 21.0 | 24.0 |
| **16-05-2024** | 2.0 | 5.0 | 4.0 | 2.0 | 2.0 | 3.0 | 2.0 | 2.0 | 3.0 | 4.0 | 3.0 | 2.0 |
| **17-05-2024** | 20.0 | 26.0 | 28.0 | 25.0 | 27.0 | 28.0 | 22.0 | 22.0 | 28.0 | 25.0 | 27.0 | 27.0 |
| **18-05-2024** | 23.0 | 20.0 | 25.0 | 24.0 | 26.0 | 26.0 | 23.0 | 23.0 | 24.0 | 19.0 | 22.0 | 27.0 |
| **19-05-2024** | 18.0 | 20.0 | 25.0 | 24.0 | 28.0 | 28.0 | 20.0 | 20.0 | 26.0 | 18.0 | 23.0 | 28.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | வரும் 5 நாட்களில் மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகமானது மணிக்கு 4 - 20 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனத்தினை ஒத்திவைக்கவும். பயிர் கழிவு மூடாக்கு இடவும்.<br>மழையினைப்பயன்படுத்தி சரிவுக்கு குறுக்காக மண் புரட்டிபோடும் கலப்பை கொண்டு கோடை உழவினை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர். |
| நெல் | விதைப்பு | மழை எதிர்பார்க்கப்படுவதால் நீர்பாசன வசதியுள்ள பகுதிகளில் குறுகிய கால நெல் சாகுபடிக்கு நாற்றாங்கால் தயார் செய்யவும். |
| சோளம் | வளர்பருவம் | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி சோளத்திற்கு, ஒரு எக்டருக்கு 50 கிலோ யூரியா என்ற அளவில் இரண்டாவது மேலுரமாக இட்டு மண்ணின் ஈரப்பதத்தைக் பொறுத்து நீர்பாசனம் செய்யவும். |
| கம்பு | வளர்பருவம் | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி கம்பு பயிரில் கைக்களையெடுத்து, ஒரு எக்டருக்கு 90 கிலோ யூரியா என்ற அளவில் முதல் மேலுரமாக இட்டு மண்ணின் ஈரப்பதத்தைக் பொறுத்து நீர்பாசனம் செய்யவும். |
| எள் | அறுவடை | அறுவடை செய்யப்படாத எள் பயிர் சாய்ந்து இருந்தால் |

| | | |
|---|---|---|
| | | நன்றாக வெய்யில் வந்தவுடன் அறுவடை செய்யவும். |
| நிலக்கடலை | விதைப்பு | பொள்ளாச்சி வட்டாரத்தில் சித்திரைப்பட்ட நிலக்கடலை நடவு செய்ய இதுவே உகந்த தருணமாகும். மேலும் மழை எதிர்பார்க்கப்படுவதால் விதைப்பதற்கு நிலம் தயார் செய்து விதைப்பு செய்யவும். |
| கரும்பு | வளர்பருவம் | உள்ளுர் பகுதிகளில் சுழற்காற்று மற்றும் இடியுடன் கூடிய கோடை மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே கரும்பில் எதிரெதிர் வரிசைகளை விட்டம் கட்டி காற்றினால் சாயமல் பாதுகாக்கவும்.<br>மழை பெய்துள்ளதால் ஏற்பட்ட மண்ணின் ஈரப்பதத்தை கொண்டு பின் பருவ கரும்பு நடவை தொடர்ந்து மேற்கொள்ளவும். |
| மஞ்சள் | நிலம் தயாரித்தல் | பெய்துள்ள மழையை பயன்படுத்தி வடிகால் வசதியுடன் தொடர்ந்து மஞ்சள் நடவு செய்யவும். |
| மரவள்ளி | அறுவடை | பெய்துள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி மரவள்ளிக்கிழங்கு அறுவடை செய்யலாம். |
| வாழை | வளர்பருவம் | உள்ளுர் பகுதிகளில் சுழற்காற்று மற்றும் இடியுடன் கூடிய கோடை மழை பொழிய வாய்ப்புள்ள து, எனவே 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| திராட்சை | | நிலவும் வானிலை உகந்ததாக இருப்பதால் பருவகால திராட்சையில் கவாத்து செய்யவும். |
| தென்னை | | கோடை காலத்தில் பெறப்படும் மழையினை வேர் பகுதியல் சேமிக்கும் வகையில் மரத்தினை சுற்றிலும் பாத்திகளை உள்நோக்கி சாய்வாக ஆழப்படுத்தவும்,<br>உற்பத்திதிறனை பராமரிக்க ஒரு மரத்திற்கு ஒரு நாளைக்கு 100 லிட்டர் தண்ணீர் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும். |
| கால்நடைகள் | | மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகுடில்களின் கூரைகளைப் மழைநீர் ஒழுகாமல் பராமரிக்கவும். |

## குறுஞ்செய்தி

- வரும் நாட்களில் மேற்கு மண்டலத்தில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. மழையினைப்பயன்படுத்தி சரிவுக்கு குறுக்காக கோடை உழவினை மேற்கொள்ளவேண்டும்.